# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - கல்வியாண்டு 2010 - 2011

## தமிழ்மொழி - ஆண்டு 5

சுட்டெண்:................................. நேரம்: 120 மணித்துளிகள்

**1) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் மிகப்பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.**

1. தமிழிலுள்ள உயிர் எழுத்துக்களின் எண்ணிக்கை ____________________.
   (18, 12, 30)

2. ஒரு நாட்டிலிருந்து பொருட்களை இன்னொரு நாட்டிற்கு அனுப்புவது ________________.
   ( இறக்குமதி, ஏற்றுமதி, வணிகம் )

3. கப்பல் நாவாய் மரக்கலம் என்பன ________________.
   ( விண்ணுந்துகள், நீருந்துகள், சிற்றுந்துகள் )

4. ஆழப்பெருங் கடலை ________________ என்று கூறுவர்.
   (ஆழி, கடல், பரவை)

5. ஒருவர் ______________ மூலமே எந்த இனத்தவர் என்று அடையாளம் காணப்படுகிறார்.
   (வாழிடமொழி, நாகரிகம், தாய்மொழி)

6. நல்ல பண்பு உள்ளவரின் நட்பு பழகப்பழக ____________________.
   (வெறுக்கும், கசக்கும், இனிக்கும்)

7. யாதும் ஊரே யாவரும் ____________________. (கேளும், கேளிர், கேள் )

8. குமரன் குளிரால் ____________________.
   (நடுங்கியது, நடுங்கின, நடுங்கினான்)

9. காளைகள் ______________________________ சிங்கத்தை வென்றன.
   (வேற்றுமையால், ஒற்றுமையால், பிரிந்ததால்)

10. பூ + சோலை என்பதைச் சேர்த்து எழுதினால் ________________.
(பூஞ்சோலை, பூச்சோலை, பூம்சோலை)

11. வன்னிப் பெருநிலத்தின் முன்னாள் துறைமுகம் ________________.
(மாதோட்டம், பூநகரி, கந்தரோடை)

12. பகைவரின் செருக்கை அழிக்கும் கருவி ________________.
(குணம், கல்வி, செல்வம்)

13. அறநூல்கள் மாந்தர் கடைப்பிடிக்க வேண்டிய ________________ பற்றிக் கூறுகின்றன.
(விரதங்கள், தீயவை, ஒழுக்கங்கள்)

14. தொட்டில் பழக்கம் ________________ வரைக்கும்.
(வீடு, சுடுகாடு, வாசல் )

15. நாம் ________________ நட்பைத் தேடிப் பெறவேண்டும்.
(தீயோர், நல்லோர், வஞ்சகர்)

16. ஆடற்குல ஆண்கள் கூத்தர், ஆடற்குலப் பெண்கள் ________________.
(விறலியர், நடிகையர், கூத்தியர்)

17. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது ________________.
(பகை, நட்பு, அன்பு)

18. பொங்கலன்று ________________ நீராடிப் புத்தாடை புனைவர்.
(மாலையில், இரவில், வைகறையில்)

19. உலகில் மழைபெய்வதற்குக் காரணமானவன் ________________.
(மன்னன், உழவன், கதிரவன்)

20. தஞ்சைப் பெருங்கோவிலினது சுவர்களில் தமிழர்களது பண்பாட்டுக் கலாசார ________________ தீட்டப்பட்டுள்ளன.
(படங்கள், ஓவியங்கள், பாசறைகள்)

21. மாமல்லபுரத்தைச் சிற்பக் காடாக்கிய மன்னன் ________________.
(இராசராசன், குலோத்துங்கன், நரசிம்மபல்லவன்) )

22. தஞ்சைப் பெரியகோவிலில் உள்ள ________________ உலகமகக்களை வியக்கவைக்கிறது.
( கற்சங்கிலி, ஓவியம், கோபுரம்)

23. பயிர்கள் செழித்து வளரப் பகலவன் ________________ வேண்டும்.
(ஒளி, ஒழி, ஒலி)

24. ________________ ஆடற்கலை பற்றித் துல்லியமாகக் கூறுகிறது.
(திருக்குறள், நாலடியார், சிலப்பதிகாரம்)

25. நான் பெற்ற ____________________ பெறுக இவ்வையகம்.
( துன்பம், இன்பம், செல்வம்)

26. ____________________ என்பது ஊர்மக்களுக்காக ஆடப்படும் ஆடற்கலை ஆகும்.
(பொதுவியல், வேத்தியல், கூத்தியல்)

27. ஒருவரின் பண்பை அறிந்தே நட்புக் கொள்ள ____________________.
(வேண்டாம், உண்டு, வேண்டும்)

28. தமிழர் வணிகத்தால் உலகமொழிகளில் இருக்கும் ஒரு தமிழ்ச்சொல் ____________________.
(தோணி, அரிசி, குதிரை)

29. நாம் என்றும் ____________________ தாய்நாட்டை மறக்க மாட்டோம்.
( எனது, உனது, எமது )

30. நாம் கற்பனையில் வாழ்வதை விடுத்து, ____________________ இருத்தல் வேண்டும்.
( சோம்பேறியாய், முயற்சியுடையோராய், இகழ்ச்சியுடையோராய் )

(புள்ளிகள் 30)

## 2) பொருத்தமான சொற்றொடரைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| தன்னந்தனியே | பழகப்பழக | கடகட |
| பென்னம்பெரிய | திரள்திரளாகத் | |

1. நற்பண்புடையாரது நட்பு ____________________ மனதுக்கு இனிமை தரும்.
2. மக்கள் ____________________ திருவிழாவிற்குச் சென்றனர்.
3. தமிழ்ச் சிறார்கள் பலர் தமது குடும்பத்தினரை இழந்து ____________________ வாழ்கின்றனர்.
4. குதிரை வண்டி கற்பாதையில் ____________________ என்று வேகமாகச் சென்றது.
5. தெருவோரத்தில் ____________________ மரங்கள் நின்றன.

(புள்ளிகள் 10)

## 3) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழர் பண்பாட்டில் இரண்டறக் கலந்த ஒன்று நடுகல் வழிபாடு. தன் தாய் மண்ணின் விடிவிற்காக வீரச்சாவடைந்தோருக்கு நடுகல் நாட்டுவது தமிழர் மரபு. போற்றுதற்குரிய வீரனைப் புதைத்த இடத்தில் கல்லொன்றை நாட்டுவர். அதில் அவனைப் பற்றிய செய்தி பொறிக்கப்பட்டிருக்கும். அதுவே நடுகல் எனப்படும். அந்நடுகல்லை அவ்வீரர்களின் நினைவுக் கோவிலாகக் கொள்வர். இத்தகைய சிறப்பு வாய்ந்த நடுகற்களைத் தமிழர் போற்றி வணங்குகின்றனர். தமிழரது வீரத்தைப் பற்றிக் கூறும் நூல் புறநானூறு. அந்நூலில் நடுகல் பற்றிய செய்திகள் நிறைந்து கிடக்கின்றன. தமிழீழத்தில் துயிலும் இல்லங்களில் நடுகற்கள் இருந்தன. அவை வணங்கத்தக்க தெய்வீகம் உடையவை.

1. யாருக்கு நடுகல் நாட்டப்படும்?

2. எந்த இலக்கியத்தில் நடுகல் பற்றிய செய்திகள் உள்ளன?

3. தமிழீழத்தில் துயிலும் இல்லங்களிலுள்ள நடுகற்கள் எப்படிப்பட்டவை?

4. நடுகல்லில் என்ன பொறிக்கப்பட்டு இருக்கும்?

5. வீரச்சாவு என்றால் என்ன?

(புள்ளிகள் 10)

**4) கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.**

| | | |
|---|---|---|
| வளர்பிறை | கொல்லப்பட்டார் | வீரத்தை |
| நண்பர்கள் | நோக்கிப் | |

மாமல்லன் எனப்படும் நரசிம்ம பல்லவனும் பரஞ்சோதி என்பவனும் மிக நெருங்கிய ______________________. மாமல்லன் மன்னனின் மகன். ஆனால் பரஞ்சோதியோ ஒரு தொழிலாளியின் மகன். இவர்கள் இருவரும் ஓரே பள்ளியில் படித்து வந்தனர். இருவரும் அஞ்சா நெஞ்சுடையவர்களாகவும் அன்புடையவர்களாகவும் இருந்தனர். இதனால் இவர்களுடைய நட்பு ______________________ போல் வளர்ந்தது. மாமல்லனின் தந்தையும் பரஞ்சோதியிடம் அன்பு செலுத்தி வந்தார். இந்நிலையில் வடநாட்டு மன்னர்களால் மாமல்லனின் தந்தை ______________________. அதன் பின்பு மாமல்லன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். தனது நண்பன் பரஞ்சோதியை படைத் தளபதியாக்கினான். இவர்கள் இருவரும் சேர்ந்து வடதிசை ______________________ படையெடுத்தனர். மாமல்லனின் தந்தையைக் கொன்ற புலிகேசியின் வாதாபி நகரை வெற்றி கொண்டு தமிழரின் ______________________ நிலைநாட்டினர். இவ்வீரவரலாறு மாமல்லன், பரஞ்சோதி ஆகியோரின் நட்பினால் விளைந்தது என்று போற்றப்படுகிறது.

(புள்ளிகள் 10)

**5) தரப்பட்டுள்ள பந்தியை உமது வாழிட மொழியில் எழுதுக.**

ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு தேசிய விலங்கு உண்டு. கங்காரு அவுத்திரேலியாவின் தேசிய விலங்காகும். இது வயிற்றின் முன்புறம் உள்ள பை போன்ற உறுப்பில் தன் குட்டிகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கும். அவற்றைப் பார்க்க அழகாக இருக்கும்.

______________________

______________________

______________________

______________________

______________________

______________________

______________________

______________________

(புள்ளிகள் 05)

**6) பாடலை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

*மலையில் வந்து முகில்கள் கூட*
*வண்ண மயிலும் ஆடுது*
*அழகுத் தோகை விரித்து நின்றே*
*ஆனந்த மாய் ஆடுது.*
*கோல மயிலின் கூத்தைக் கண்டு*
*குரங்கு தாளம் போடுது*
*கொப்புக் கொப்பாய்த் தாவிப் பாய்ந்து*
*குரங்கு தாளம் போடுது.*
*வானம்பாடி மயிலின் கூத்தை*
*வாழ்த்திப் பாட்டுப் பாடுது*
*வண்ணக் கிளியும் வந்திருந்து*
*மயிலின் கூத்தைப் பார்க்குது.*

1. எதைக் கண்டதும் மயில் ஆடுகின்றது?

_______________________________________________

_______________________________________________

2. மயில் எப்படி ஆடுகின்றது?

_______________________________________________

_______________________________________________

3. மயிலின் ஆட்டத்திற்குத் தாளம் போடுவது எது?

_______________________________________________

_______________________________________________

4. வானம்பாடி என்ன செய்கிறது?

_______________________________________________

_______________________________________________

5. மயிலின் கூத்தைப் பார்ப்பது எது?

_______________________________________________

_______________________________________________

(புள்ளிகள் 05)

**7. பாடநூல் வினா - ஐந்திற்கும் முழுவிடை தருக.**

1. பழந்தமிழர்கள் ஏற்றுமதி செய்த நான்கு பொருட்களின் பெயர்கள் தருக?

2. காளைகள் எதனால் சிங்கத்தை வென்றன?

3. தமிழர்களது அறநூல்களில் சிறந்த நூல் எது?

4. தமிழ்ப் புத்தாண்டின் மறுபெயர்களைத் தருக.

5. ஆடற்கலையின் இரு பிரிவுகளை எழுதுக?

(புள்ளிகள் 15)

**8) தரப்பட்ட தலைப்புகளில் ஒன்றிற்கு 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரையொன்று எழுதுக.**

**1. அறநூல் கூறும் நட்பு**

**2. ஆடற்கலை**

**3. தமிழ்ப்பள்ளி ஆண்டுவிழா**

**4. வன்னி மக்களுக்கு உதவுவோம்.**

(புள்ளிகள் 15)